# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 Date : 12/12/2023
Case No. : O.S. 492/2019 Nationality : Indian
Name :ரமேஷ் Religion :
Father's/Husband's Name : **தண்டபாணி** Age :48
Village :
Taluk :

<u>வா.சா.1</u>
சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. பிராதுவில் என்ன விவரங்கள் எழுதி உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான் விவசாயம் செய்து வருகிறேன். பாலன் சிட்ஸ் என்ற நிறுவனத்தை யார் நடத்தி வருகிறார் என்றால் எனது அண்ணன் மோகனசுந்தரம் நடத்தி வருகிறார். எவ்வளவு காலமாக நடத்தி வருகிறார் என்றால் சுமார் 60 வருடங்களாக நடத்தி வருகிறார். எனக்கு எத்தனை சகோதரர்கள் என்றால் தம்பி கார்த்திகேயன், அண்ணன் மோகனசுந்தரம் ஆகியோர்கள் சகோதரர்கள் ஆவார்கள். நாங்கள் அனைவரும் கூட்டுக்குடுமபமாக வசிக்கிறோம் என்றால் தனித்தனியே வசித்து வருகிறோம். பாலன் சிட்ஸில் கார்த்திகேயன் என்ன பொறுப்பில் உள்ளார் என்றால் கார்த்திகேயனுக்கும் பாலன் சிட்ஸ்ற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பிரதிவாதிக்கு எதிராக நான் வேறு எதுவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

2. நானும் எனது சகோதரர்களும் பேச்சுவார்த்தையில் தான் உள்ளோம் என்றால்

சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. தாவா சொத்துகளின் விஸ்தீரணம் தனித்தனியாக தெரியாது. தாவா சொத்தில் 4 லிருந்து 6 இனச் சொத்துக்களுக்கு யார் உரிமையாளர் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் உரிமையாளர் ஆவார். அதேபோல் 1 லிருந்து 3 இனச் சொத்துக்களுக்கு யார் உரிமையாளர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த எந்த சொத்துக்கு யார் உரிமையாளர் என்ற விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்திலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலம் உள்ளது என்றால் 19 ஏக்கர் நிலம் உள்ளது. வா.சா.1.ஆ முதல் வா.சா.ஆ.3. ஆவணங்கள் எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் என்னால் பிரௌசிங் சென்டரில் வைத்து தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.4 என்ன ஆவணம் என்றால் இன்சூரன்ஸ் ஆவணம். அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2020 ம் ஆண்டு இன்சூரன்ஸ் செலுத்தியதற்கான ரசீது ஆகும். அந்த ரசீது எனக்கு சொந்தமான நிலத்திற்கு கட்டப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் தான் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் எனக்கு சொந்தமான நிலத்திற்கு கட்டப்பட்டது என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு எதிராக கேவியட் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கேவியட் மனுவா என்றால் எனக்கு தெரியாது.

3. எந்த எந்த நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்தேன் என்றால் இந்த நீதிமன்றத்திலும், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். அந்த கேவியட் மனுவினை பிரதிவாதி அவரது மனைவி , அவரது மகன் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பாராவில் சொல்லியுள்ள விவரங்கள் என்ன என்பது எனக்கு

தெரியுமா என்றால் சரியாக நினைவு இல்லை. எனது அண்ணன் மோகனசுந்தரத்தின் சார்பாக வழக்கு நடத்த சொன்னால் நான் நடத்தி கொடுப்பேனா என்றால் கொடுக்கமாட்டேன். இந்த வழக்கின் விவரங்களை பற்றி எனது அண்ணனுடம் ஆலோசனை செய்தேனா என்றால் இல்லை. அவருக்கு இவ்வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பி கார்த்திகேயனுக்கு இவ்வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கும் பாலன் சிட்ஸிற்கும் இடையே பண பரிவர்த்தனைகள் உண்டா என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் எந்த தேதியில் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் தேதி நினைவு இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்துக்கள் எந்த காலத்திலும் எனது அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்கள் பிரதிவாதியின் மகன் முகமது ரியாசுதீன் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா 4 முதல் 6 இனச்சொத்துக்கள் பிரதிவாதியின் மனைவி சம்சாத்பேகம் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா 7, 8 இனச்சொத்துக்கள் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எந்த விதமான சம்பவங்களும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 12/08/2019 ம் தேதி எந்த விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனது அண்ணனின் பேச்சை கேட்டுக்கொண்டு என்ன விவரங்கள் உள்ளது என்று தெரியாமலே வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நாளது தேதி வரை எனது அனுபவத்திலோ,

சுவாதீனத்திலோ இல்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனின் பொய்யான அறிவுரையின் பேரில் பொய்யான ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்ககூடியதில்லை என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

/sd/N.Sivapalani/
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.